# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-98** **தேதி:-01.11.2011.**

## வேலை நிறுத்தம் ஒத்தி வைப்பு

அன்பார்ந்த தோழர்களே,

31.10.2011அன்று புது டெல்லியில் AIBSNLEA பொது செயலாளர் தோழர்.பிரகலாத் ராய் தலைமையில் கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. கடந்த கூட்டத்திற்கு பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகளை கூட்டு நடவடிக்கைக் குழுவின் (JAC) அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி கூட்டத்தில் தெரிவித்தார்.

அக்டோபர் 10 ஆம் தேதி நடைபெறுவதாக இருந்து, பரந்து பட்ட ஒற்றுமையை கட்டும் பொருட்டு ஒத்திவைக்கப்பட்ட ஒரு நாள் வேலை நிறுத்தம் தான் அந்த கூட்டத்தின் ஒரே ஆய்படுபொருள். இதற்கிடையேயான காலகட்டத்தில் NFTE மற்றும் FNTO சங்கங்களை இந்த வேலை நிறுத்தத்தில் இணைவதற்கு தொடர்பு கொள்ளப்பட்டிருந்தது.

அனைத்து விஷயங்கள் தொடர்பாகவும் விரிவாக விவாதிக்கப்பட்ட பின் கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:

**1) சங்கங்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலும், போராட்டத்திற்கு பரந்து பட்ட ஒற்றுமையை கட்டுவதற்கும், வேலை நிறுத்தத்தை முழு தயாரிப்புடன் நடத்துவதற்கும் ஏதுவாக ஒத்திவைக்கப்பட்ட வேலை நிறுத்தத்தை டிசம்பர் மாத மத்தியில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.**
2) ஏற்கனவே முடிவு செய்தபடி ஒரு நாள் வேலை நிறுத்தமாகவே இருக்கும்.
3) இதற்கிடையே பொருத்தமான தேதியை முடிவு செய்வதற்காக NFTE மற்றும் FNTO சங்கங்களுடன் விவாதிக்கப்படும்.
4) பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து, பாராளுமன்றத்தில் விவாதிக்க அவர்களின் ஆதரவை கோரும் ஒரு வேண்டுகோளை கூட்டு நடவடிக்கைக் குழு தயாரித்து அளிக்கும். அதனை நமது தோழர்கள் தாங்கள் பணியாற்றும் பகுதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து வழங்க வேண்டும்.
5) இதனிடையில் வேலை நிறுத்த தயாரிப்பு பணிகளை முழுவீச்சில் அனைத்து மட்டங்களிலும் நமது தோழர்கள் முன்னெடுத்து செல்லவேண்டும்.

(கூட்டு நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி வெளியிட்ட சுற்றறிக்கையின் தமிழாக்கம் மேலே தரப்பட்டுள்ளது. கூட்டு நடவடிக்கைக் குழுவின் அனைத்து முடிவுகளையும் நாம் முழுமையாக அமுல் படுத்துவோம்.)

வாழ்த்துக்களுடன்,

**தோழைமையுள்ள**

**S.செல்லப்பா.**
**மாநில செயலாளர்.**